KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823

Follow us:

# தமிழன்
THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 226 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 25ஆம் திகதி வியாழக்கிழமை
(08.05.2025) ஹிஜ்ரி 1446, துல்கஃதா - 09, 0115 886187- விலை ரூ.50 பக்கங்கள் 14

KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823



# இந்தியா - பாகிஸ்தான் போர் வெடிக்கும் நிலை!

## நடுநிசியில் திடீர் தாக்குதலை தொடுத்து பாரதம் அதிரடி

» 14 பக்கம்




## உள்ளூராட்சி தேர்தல் 2025

# ★ தேசிய மக்கள் சக்தியின் மக்கள் ஆதரவில் வீழ்ச்சி

# ★ வடக்கில் சபைகள் தமிழ்க்கட்சிகள் வசம்

# ★ கிழக்கில் முஸ்லிம் கட்சிகள் செல்வாக்கு

# ★ மலையகத்தில் பிரிந்த வாக்குகள்

# ★ அநேகமான சபைகளில் கூட்டாட்சி அமைக்க பேச்சு

» 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...




### உஷ்



உள்ளூராட்சித் தேர்தல் முடிவின்படி மக்கள் ஆதரவில் ஏற்பட்டிருக்கும் சரிவு தொடர்பில் அரச மேல்மட்டத்தில் கடும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளதாம்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படத் தொடங்கிய சில மணி நேரத்தில் தேர்தலின் முடிவு இப்படித்தான் வரும் என்ற தகவல் ஜனாதிபதி மற்றும் அரசின் மேல்மட்ட பிரமுகர்களுக்கு தெரியவந்ததாம்.தேர்தலில் பின்னடைவு வந்தால் மக்களிடம் அதனை எப்படி பிரதிபலிப்பது என்பது குறித்து அப்போதே அரச மேல் மட்டத்தில் ஆராயப்பட்டதாம்.

எப்படியோ அரச மேல்மட்டத்தில் அதிரடி மாற்றங்கள் விரைவில் நடக்குமென தகவலொன்று கூறுகிறது.

# சகல சக்திகளையும் ஒன்றிணைப்போம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சூளுரை



அவமானங்கள், அச்சுறுத்தல்கள், சேறுபூசும் வார்த்தைகள், சதித்திட்டங்கள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்து ஆதரித்த மக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். » 02 பக்கம்

# தேர்தல் முடிவுகளால் அரசுக்கு பாடம் புகட்டு

## யாழில் தெரிவித்தார் சுமந்திரன்



யாழ்ப்பாணம் மாநகர சபையைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே அதிகளவான ஆசனம் கிடைக்கப்பெற்றது. ஆகையால், மாநகர முதல்வர் பதவி இலங்கை தமிழரசுக் கட்சிக்கே உரித்தானது. ஏனைய கட்சிகள் அதனை அனுசரித்து எமக்கான ஆதரவைக் கொடுக்க வேண்டும் என்பது எங்களுடைய.... » 02 பக்கம்




# தேர்தல் முடிவுகள் ஒரே பார்வையில்...

| | | |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | - 265 சபைகள் - 3,926 உறுப்பினர்கள் | (4,503,930 - 43.26%) |
| ஐக்கிய மக்கள் சக்தி | - 14 சபைகள் - 1,767 உறுப்பினர்கள் | (2,258,480 - 21.69 %) |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | - 742 உறுப்பினர்கள் | (954 , 517 - 9.17 %) |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 382 உறுப்பினர்கள் | (488,406 - 4.69 %) |
| இலங்கை தமிழரசுக் கட்சி | - 35 சபைகள் - 377 உறுப்பினர்கள் | (307,657 -2.96%) |
| மக்கள் கூட்டணி | - 300 உறுப்பினர்கள் | (387,098 - 3.72 %) |
| சர்வசன அதிகாரம் | - 226 உறுப்பினர்கள் | (294,681 -2.83 %) |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 6 சபைகள் - 116 உறுப்பினர்கள் | (139,858 - 1.34 %) |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு | - 1 சபை -106 உறுப்பினர்கள் | (89,177 - 0.86 %) |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | - 3 சபைகள் - 60 உறுப்பினர்கள் | (75,268 - 0.72 %) |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | - 2 சபைகள் - 54 உறுப்பினர்கள் | (71,655 - 0.69 %) |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | - 3 சபைகள் - 101 உறுப்பினர்கள் | (70,944 - 0.68 %) |
| மக்கள் போராட்ட முன்னணி | - 16 உறுப்பினர்கள் | (50,492 - 0.48 %) |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | - 1 சபை - 37 உறுப்பினர்கள் | (39,791 - 0.38 %) |
| தேசிய சுதந்திர முன்னணி | - 26 உறுப்பினர்கள் | (39,443 - 0.38 %) |
| IND சுயேச்சைக் குழுக்கள் | - 64 உறுப்பினர்கள் | (66,901 - 0.64 %) |

# கொழும்பு மாநகர சபையில் எமது கட்சிக்கே மேயர் பதவி

## ஐக்கிய மக்கள் சக்தி பொதுச் செயலாளர் ரஞ்சித்



கொழும்பு மாநகர சபையில் புதிய நிர்வாகத்தை ஐக்கிய மக்கள் சக்தி ஏனைய கட்சிகளுடன் இணைந்து அமைக்கும். புதிய மேயராக எமது கட்சியைச் சேர்ந்தவரே நியமிக்கப்படுவார்.

ஆளும் தரப்பு பெரும்பான்மையைப் பெறாத, பிற உள்ளூராட்சி மன்றங்களில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஏனைய கட்சிகளுடன் இணைந்து பணியாற்ற ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமை அலுவலகத்தில் நேற்று (07) நடந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''எதிர்காலத்தில், உள்ளூராட்சி நிறுவனங்களில் அதிகாரத்தை நிறுவும்போது எதிர்க்கட்சியின் ஒற்றுமையை அரசாங்கத்துக்கு நிரூபிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். வென்ற அதிக எண்ணிக்கையிலான உள்ளூராட்சி மன்றங்களில் அரசாங்கத்துக்கு பெரும்பான்மை இல்லை. மக்களின் வாக்குகளுக்கு மதிப்பளித்து, அதிகளவிலான உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை நிலைநாட்ட எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல கட்சிகளுடனும் ஒன்றிணைந்து செயற்படுவோம்''- என்றார்.

# பிற கட்சிகளுடன் கூட்டணி இல்லை

## ஜே.வி.பி. திட்டவட்டம்



வாக்காளர்களால் நிராகரிக்கப்பட்ட பிற அரசியல் கட்சிகளுடன் தேசிய மக்கள் சக்தி கூட்டணி அமைக்காது என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

''தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு ஊழல் இல்லாத தேசிய சீர்திருத்தத் திட்டத்தைத் தொடர ஒரு ஆணை வழங்கப்பட்டுள்ளது. தனி ஒரு கட்சியாக தேசிய மக்கள் சக்தி தெளிவான மற்றும் முன்னணி வெற்றியைப் பெற்றுள்ளது. இது சிறப்பு வாய்ந்தது. அதிகாரங்களை நிறுவுவதற்கு சுயாதீனக் குழுக்களுடன் இணைந்து செயற்பட தேசிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது. ஆனால், வாக்காளர்களால் நிராகரிக்கப்பட்ட பிற அரசியல் கட்சிகளுடன் கூட்டணி அமைக்காது. முன்னணிக் கட்சியாக எங்களுக்கு ஆட்சி செய்ய உரிமை உண்டு. சட்டத்திலுள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற நாங்கள் தயாராக இல்லை.

தேசிய மக்கள் சக்தி மீதான நம்பிக்கையை மக்கள் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளனர்''- எனக் குறிப்பிட்டுள்ளார்.

# நான் கூறியதை கேட்டிருந்தால் வெற்றி அமோகமாகி இருக்கும்

## சொல்கிறார் ரணில்



உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் குறித்து ஊடகங்களுக்கு பேட்டியளித்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தான் அறிவுறுத்தியபடி எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து சபைகளில் கூட்டணியாகப் போட்டியிட்டிருந்தால் ஐம்பது முதல் நூறு எண்ணிக்கையிலான இடங்களை வென்றிருக்க முடியுமென்று கூறினார்.

குறிப்பாக, கொழும்புக்கு இதுபோன்ற ஒன்றைச் செய்திருக்க வேண்டுமென்று கூறிய ரணில் விக்கிரமசிங்க, தான் சொன்னது போல் எதிர்க்கட்சிகள் ஒன்றுபடாததால் மக்கள் பிளவுபட்டுள்ளனர் - என்றார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது,

''ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு நாங்கள் யானைச் சின்னத்தின் கீழ் போட்டியிட்டோம். இதை ஒரு தொடக்கமாகக் கருதலாம். சில பகுதிகளில் முடிவுகள் நன்றாக உள்ளன. நாம் திருப்தியடையலாம். இப்போது ஐக்கிய தேசியக் கட்சி வேலை செய்ய வேண்டும். இப்போது எதிர்க்கட்சிகள் ஒன்று கூடி மக்களுக்கு ஏதாவது ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும்.

நான் தேர்தல் பிரசாரப் பணிகளில் பங்கேற்கவில்லை. இது இளம் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இது ஒரு பரீட்சார்த்த நடவடிக்கை. இதில் நல்ல விஷயங்களும் உள்ளன. தோல்விகளும் உள்ளன. தற்போது நம்மிடம் உள்ள பலத்தைக் கொண்டு எப்படி முன்னேறுவது என்பது பற்றியே நாம் சிந்திக்க வேண்டும்.

யானைச் சின்ன வேட்பாளர் எனப் பரிந்துரைக்கப்படும்போது மக்கள் வாக்களிக்க வருவார்கள் என்று சிலர் கூறினர். யானைச் சின்ன வேட்பாளர் என்பதால் மட்டும் மக்கள் வாக்களிக்க வரமாட்டார்கள் என்று இப்போது தெரிகிறது. இப்போது நாம் கட்சிக்கு புதிய உறுப்பினர்களை அறிமுகப்படுத்த வேண்டும். இதற்குப் பிறகு, இளைய தலைமுறையினர் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு முன்னேற வேண்டும்''- என்றார்.

## சகல சக்திகளையும்...

நமது நாட்டின் ஜனநாயகத்தை வலுப்படுத்த முன்வந்து இந்தத் தேர்தலுக்கு ஒத்துழைப்பை நல்கிய நமது நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நேற்று (07) விசேட அறிக்கையை முன்வைத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் ,

''அண்மையில் நடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் இரு பெரும் மக்கள் ஆணைகளைப் பெற்ற இந்த அரசாங்கம், 6 மாதங்கள் என்ற குறுகிய காலத்தில் மிகப்பெரிய சரிவைச் சந்தித்துள்ளது. எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல தரப்பினர்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு செயற்பட வேண்டுமென்ற செய்தியை நாட்டு மக்கள் இத்தேர்தலினூடாக முன்வைத்துள்ளனர். ஜனாதிபதித் தேர்தலைக் கையாண்டது போலவே இந்த உள்ளூராட்சித் தேர்தலையும் ஜே.வி.பி. கையாண்டது. தேர்தலுக்காக மதத்தைக் கூட இவர்கள் பயன்படுத்தினர்.

நாட்டு மக்கள் இப்போது பொய்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர். உண்மையான மக்கள் சேவையை முன்னெடுப்பதற்கான தமது அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர். பொய்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து - பொய்களை முறியடித்து- உண்மையான பலம் வாய்ந்த மக்கள் சேவைக்காக எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல தரப்புகளும் ஒன்றிணைய வேண்டுமென்ற பொதுமக்களின் கருத்தின் அடிப்படையில் இந்தச் சவாலான பொறுப்புக்கு தலைமை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது.

ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நபராக, நாங்கள் பொதுமக்களின் கருத்துக்கு தலைவணங்கி, எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல தரப்பினர்களையும் ஒன்றிணைப்போம். அதனூடாக வெளிப்படைத்தன்மை வாய்ந்ததும் கொள்கை ரீதியானதுமான சிறந்த மக்கள் சேவையைப் பெற்றுத் தருவோம். இதற்கான தலைமைத்துவத்தை ஐக்கிய மக்கள் சக்தி வழங்கும்'' - என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

# இது வெறும் ஆரம்பம் தான்: தேர்தல் முடிவு குறித்து நாமல்

''இது வெறும் ஆரம்பம். உண்மையான தலைமையின் மீதான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பவும் மீட்டெடுக்கவும் நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம்''- என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து நாமல் ராஜபக்ஷ தனது எக்ஸ் தளத்தில் கருத்தொன்றைப் பதிவிட்டுள்ளார்.



அந்தப் பதிவில்,

"கடந்த ஆறு மாதங்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மீண்டும் ஒன்றிணைந்து எங்கள் கொள்கைகளுக்கு உண்மையாக இருப்பதன் மூலம் உத்வேகம் பெற்றுள்ளது.

சிலர் பொய்யான வாக்குறுதிகளை நம்பியிருந்தாலும் மக்களை முதன்மைப்படுத்தும் நேர்மையான, கொள்கை ரீதியான அரசியலுக்கு நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

எங்களுடன் நின்ற அனைவருக்கும் நன்றி. இது வெறும் ஆரம்பம். உண்மையான தலைமையின் மீதான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பவும் மீட்டெடுக்கவும் நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம்"- எனப் பதிவிட்டுள்ளார்.

## உள்ளூராட்சி ...

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் கை ஓங்கிய அதேசமயம், தெற்கில் ஆளும் தேசிய மக்கள் சக்தி (திசை காட்டி சின்னக் கட்சி) முன்னணி நிலை பெற்றது. ஆயினும், இருநூறுக்கும் மேலான சபைகளில் ஆட்சி நிர்வாகத்தைக் கைப்பற்றுவதற்கான தனித்து அறுதிப் பெரும்பான்மையை அது பெற்றுக்கொள்ளவில்லை.

இந்தப் பின்புலத்தில் எதிர்க்கட்சிகள் தமக்குள் ஒன்று சேர்ந்து அந்தச் சபைகளில் நிர்வாகத்தைக் கைப்பற்றும் நிலையும் தனித்து அதிக ஆசனங்களைப் பெற்ற தேசிய மக்கள் சக்தி அச்சபைகளில் எதிர்க்கட்சியில் அமரும் சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கின்றன.

உதாரணத்துக்கு, கொழும்பு மாநகர சபையின் தேசிய மக்கள் சக்தி 48 இடங்களைப் பெற்றிருக்கின்றது. ஆனால், எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து 69 இடங்களைத் தக்கவைத்திருக்கின்றன. இந்தப் பின்புலத்தில் கொழும்பு மாநகர மேயர் பதவியை ஆளும் தேசிய மக்கள் சக்தி பெறுவது நெருக்கடியானதென சுட்டிக்காட்டப்படுகிறது.

பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி 29 இடங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 13 இடங்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 4 இடங்களையும் இங்கே பெற்றுள்ளன. ஏனைய இடங்களை பல சிறிய கட்சிகள் ஒன்று சேர்ந்து பெற்றுக்கொண்டிருக்கின்றன.

இந்தப் பின்புலத்தில் கொழும்பு மாநகர சபையின் கூட்டத்தில் இடம்பெறும் வாக்கெடுப்பின் மூலமே மேயர் தெரிவு நடைபெறுமெனத் தெரிகிறது. எதிர்க்கட்சிகள் தங்களுக்குள் ஒன்றிணைந்து கொழும்பு மாநகர மேயரைத் தெரிவுசெய்யக்கூடிய சூழல் இருக்கின்றது.

தென்னிலங்கையில் பல இடங்களிலும் இதுதான் நிலைமை. தனித்து அதிக ஆசனங்களை எடுத்த தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சி வரிசையில் அமர வேண்டிய இக்கட்டு.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியையும் பாராளுமன்றத்தில் வலிமையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையையும் ஆளும் தேசிய மக்கள் சக்தி வைத்திருக்கின்ற காரணத்தால் நாட்டின் எதிர்க்கட்சிகள் அதற்கெதிராக விரும்பியோ விரும்பாமலோ தங்களுக்குள் ஒன்றுபட்டு உள்ளூராட்சி மன்றங்களை ஆளுந்தரப்புக்கு கிடைக்காமல் செய்வதில் கவனமாக இருக்கும் கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

**தேசிய மக்கள் சக்திக்கு பின்னடைவு**

நேற்றுமுன்தினம் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வாக்கு எண்ணிக்கை பெரும்பாலும் முடிவுற்று, உத்தியோகபூர்வ அறிவிப்புக்குக் காத்திருக்கும் நிலையில், வடக்கு, கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - ஆளும் தேசிய மக்கள் சக்தி (திசை காட்டி சின்னக் கட்சி) எதிர்பார்த்த வெற்றிகள் எவற்றையும் பெறவில்லை.

வடக்கு, கிழக்கில் தமிழர்களின் தனிப் பெரும் கட்சியாகத் தமிழரசு மீண்டும் தலை நிமிர்ந்தது. அதற்கு அடுத்து பல பிரதேச சபைகளில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் (சைக்கிள் சின்னக் கட்சி) உள்ளடக்கிய தமிழ் மக்கள் பேரவை கணிசமான வெற்றிகளைப் பெற்றிருக்கின்றது.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 13 இடங்களையும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 12 இடங்களையும் தேசிய மக்கள் சக்தி 10 இடங்களையும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 4 இடங்களையும் ஈ.பி.டி.பி. 4 இடங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி ஓர் இடத்தையும் ஐக்கிய தேசியக் கட்சி ஓர் இடத்தையும் பெற்றுள்ளன.

வல்வெட்டித்துறை நகர சபை, பருத்தித்துறை நகர சபை, சாவகச்சேரி நகர சபை ஆகிய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள மூன்று நகர சபைகளிலும் முன்னிலையை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியை உள்ளடக்கிய தமிழ் மக்கள் பேரவை பெற்றுக்கொண்டது. அதேவேளை, சாவகச்சேரி பிரதேச சபையில் அத்தத் தரப்புக்கு 6 இடங்களும் தமிழரசுக்கு ஆறு இடங்களும் கிடைத்துள்ளன.

கோப்பாயில் தமிழரசுக்கு 11 இடங்களும் தேசிய மக்கள் சக்திக்கு ஒன்பது இடங்களும் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியவை தலா ஐந்து இடங்களையும் தமிழ் மக்கள் கூட்டணி இரண்டு இடங்களையும் ஒரு சுயேச்சைக் குழு இரண்டு இடங்களையும் மற்றொன்று ஓர் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

வல்வெட்டிதுறை நகர சபையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஏழு இடங்களையும் தமிழரசு ஐந்து இடங்களையும் ஈ.பி.டி.பி. ஓரிடத்தையும் தேசிய மக்கள் சக்தி மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்டிருக்கின்றன. அங்கு காங்கிரஸின் தலைமை வேட்பாளராக எம்.கே.சிவாஜிலிங்கம் நிறுத்தப்பட்ட போதிலும், அவர் வட்டாரத்தில் போட்டியிடவில்லை. பட்டியலிலேயே அவர் பெயர் இருந்தது. ஆயினும், வல்வெட்டித்துறை நகர சபையில் சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்ட தரப்புக்கு ஏழு வட்டார வெற்றிகள் மட்டுமே கிடைத்துள்ளன. பட்டியல் வெற்றி கிடைக்கவில்லை. ஆகவே, சிவாஜிலிங்கம் முதன்மை வேட்பாளராக இருந்தாலும் அவர் நகர முதல்வராவதானால் வட்டாரத்தில் அவரது தரப்பில் வெற்றி பெற்ற ஒருவர் இராஜிநாமாச் செய்து அவருக்கு இடம் கொடுக்க வேண்டும் என்ற நிலைமை உருவாகியுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களைத் தமிழரசுக் கட்சியின் சிறீதரன் தலைமையிலான பிரசாரக் குழு துடைத்து வழித்து வென்றிருக்கின்றது. தனித்து பிரதேச சபைகளை நிர்வகிக்கும் ஆற்றலை தமிழரசு அங்கு பெற்றுக்கொண்டுள்ளது.

வவுனியாவிலும் மன்னாரிலும் சங்கு சின்னத்தில் போட்டியிட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கணிசமான வெற்றிகளைப் பெற்றிருக்கின்றது.

திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் தமிழ்ப் பிரதேச சபைகளை தமிழரசுக் கட்சி வலிமையாகக் கைப்பற்றியுள்ளது. திருகோணமலை மாநகர சபை, மட்டக்களப்பு மாநகர சபை போன்றவற்றில் ஏனைய தமிழ்க் கட்சிகளின் ஆதரவோடு தமிழரசு நிர்வாகத்தைப் பொறுப்பேற்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

மட்டக்களப்பில் தமிழர் தரப்பில் தொடர்புடைய ஒன்பது உள்ளூராட்சி மன்றங்களில் பட்டிப்பளை பிரதேச சபை தவிர்ந்த ஏனையவற்றில் தமிழரசு பெரும் வெற்றிவாகை சூடியுள்ளது. பட்டிப்பளையில் தமிழரசுக்கு ஐந்து இடங்களும் பிள்ளையானின் கட்சிக்கு மூன்று இடங்களும் சுயேச்சைக் குழுவுக்கு இரண்டு இடங்களும் கிடைத்துள்ளன. சுயேச்சைக் குழு பிள்ளையானின் கட்சியோடு சேர்ந்து இயங்கக்கூடிய நிலைமை இருப்பதாகக் கூறப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்திலும் போட்டியிட்ட பல இடங்களில் தமிழரசுக் கட்சி கணிசமான வெற்றிகளை ஈட்டியிருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் கடந்த 2 பிரதான தேர்தல்களில் பின்னடைவைச் சந்தித்த முஸ்லிம் கட்சிகள் இம்முறை தங்களது பிரதேசங்களில் கோலோச்சியுள்ளன. மலையகத்திலும் வாக்குகள் கணிசமான அளவு பிரிந்ததால் தனிப்பெரும்பான்மை அங்கு யாருக்கும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும், கூட்டாக ஆட்சியமைப்பது பற்றி தமிழ் முற்போக்குக் கூட்டணியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் பேச்சு நடத்த ஆரம்பித்துள்ளதாக அறியமுடிந்தது.

# மரண அறிவித்தல்



தோற்றம் ★ 1942 ★ 05. ★ 23

மறைவு ★ 2025. ★ 05. ★ 06

பொகவந்தலாவை கலப்பை கடை உரிமையாளர்

**வீரப்பன் சுப்ரமணியம் கவுண்டர்**

அவர்கள் 06.05.2025 (செவ்வாய்க்கிழமை) காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று 08.05.2025 (வியாழக்கிழமை) பி.ப.1.00 மணியளவில் நோர்வூட் பொதுமயானத்தில் தகனம் செய்யப்படுமென்பதை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆழ்ந்த துயரத்தில் இருக்கும்

மனைவி: காளியம்மா. மகன்மார்: சு.சங்கர், சு.கலாவண்ணன் (அசிரியை - ஹைலன்ஸ் கல்லூரி) மகள்மார்: சு.மேனகா (ஆசிரியை சென்மேரிஸ் ஆரம்பப் பிரிவு) சு.இந்திரகாந்தி. மருமகள்மார்: N.கிருஷாந்தினி, பத்மலோஜினி (ஆசிரியை சென்மேரிஸ் கல்லூரி). மருமகன்மார்: S.லெட்சுமகுமார், R.ஆனந்தன். பேரப்பிள்ளைகள்: L.ரதீஸ், S.அபினிஸியா, S.அவிஷ்கர், A.தக்ஷன், A.சஜீவன்,A.வனிஷா, K.அருனியா, K.மாதேவ்

## தேர்தல்...

வேண்டுகோள்- என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பி னருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந் திரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

''நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் முடிவுகள் வெளிவந்திருக்கின்றன. தமிழ் மக்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு கொடுத்த வெற்றியை மிகவும் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்கின்றோம். இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்கு, கிழக்கில் 58 சபைகளில் போட்டியிட்டது. இந்த 58 சபைகளில் 10க்கும் மேற்பட்ட சபைகள் தமிழர்களுக்கு பெரும்பான்மை இல்லாத சபைகளாகக் காணப்படுகின்றன. குறைந்தது 40 சபைகளில் நாங்கள் நிர்வாகங்களை அமைப்பதற்கு ஏற்றவகையில் முடிவுகள் வெளிவந்திருக்கின்றன.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தல் முடிவடைந்து ஆறுமாத காலத்துக்குள் தமிழ் மக்கள் மீண்டும் இலங்கைத் தமிழரசுக் கட்சி மீது நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள் என்பது தெளிவாகப் பிரதிபலிக்கப்பட்டிருக்கிறது.

பாராளுமன்றத் தேர்தலில் தவறான விம்பம் ஒன்று ஏற்பட்டது. 25 சதவீதமான வாக்கைப் பெற்ற தேசிய மக்கள் சக்திக்கு யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் உள்ள ஆறு ஆசனங்களில் 3 ஆசனங்கள் கிடைத்திருந்தன. 25 சதவீதமான வாக்குகளைப் பெற்ற கட்சிக்கு 50 சதவீதமான ஆசனங்கள் கிடைத்திருந்தன. அதனை வைத்துக்கொண்டு தேசிய மக்கள் சக்தியினர் யாழ். தேர்தல் மாவட்டத்தில் தமிழ் மக்களுடைய ஆணை தங்களுக்கு வந்துவிட்டதெனக் கூறித்திரிந்தார்கள்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மட்டக்களப்பில் பெருவெற்றியை ஈட்டியிருந்தது. அதேபோல், உள்ளூராட்சித் தேர்தலிலும் பெருவெற்றி பெற்றிருக்கின்றது. வடக்கில் வவுனியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் பெரு வெற்றியைப் பெற்றிருக்கின்றோம். வவுனியா மாவட்டத்தில் பின்னடைவு ஏற்பட்டதற்கான காரணங்களை அறிந்து உடனடியாக அதனை நிவர்த்தி செய்வதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுப்போம்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஒரு மாற்றம் நிகழ்ந்ததாகச் சொன்னார்கள். ஆனால், ஆறு மாதங்களுக்குள் மீண்டும் ஒரு மாற்றம் இடம்பெற்றிருக்கிறது. இதற்குக் காரணம், தமிழ் மக்களினுடைய அடையாளம் எந்தக் காலத்திலும் விட்டுக்கொடுக்க முடியாதது என்பது பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிற்பாடு மக்களினுடைய மனதில் ஆழமாகப் பதிந்துள்ளமையாகும். அது இந்தத் தேர்தலில் வெளிவந்திருக்கிறது.

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைக்கின்றபோது ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேசி முடிவுகளை எடுப்போம். உள்ளூராட்சி மன்றங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களைப் பயன்படுத்தி மக்களுக்குத் தேவையான சேவைகளை மேற்கொள்வோம். எங்கள் கட்சிகளிலிருந்து தெரிவாகிய உறுப்பினர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்கி அனைத்து சபைகளிலும் திறமையான நிர்வாகங்களை மேற்கொள்வோம்.

கடந்த 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகப் போட்டியிட்டதைவிட இந்தத் தேர்தலில் தமிழரசுக் கட்சி தனியாகப் போட்டியிட்டு பெற்ற முடிவுகள் பெறுமதியானவை. இந்த உள்ளூராட்சித் தேர்தல் முறைமையில் ஒரு கட்சியாகப் போட்டியிடுவதைத் தவிர்த்து ஒன்றாக இருக்கும் கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிட்டு பின் ஒன்றாகச் சேர்ந்து நிர்வாகங்களை அமைப்பது சிறந்ததென்பது இப்போது பலருக்குப் புரியும்.

ஆகவே, கட்சியை உடைத்து விட்டோம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்து விட்டோம் எனச் சொல்பவர்களுக்கு இந்தத் தேர்தல் முடிவுகள் சரியான பாடத்தைப் புகட்டியுள்ளன. இலங்கைத் தமிழரசுக் கட்சியும் பலவீனமடையவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் சேர்ந்திருந்ததை விட தனியாகப் போட்டியிட்டு பலமான கட்சியாக மாறியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்தவர்கள் தற்போது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்குகிறார்கள். அவர்கள் எங்களுக்கு ஆதரவளிக்கும்போது பெரும்பாலான இடங்களில் நிர்வாகத்தை அமைக்கக் கூடியதாக இருக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்துவிட்டதென்ற செய்தியை ஆரம்பத்திலிருந்தே மறுத்திருக்கின்றேன். ஏனெனில், கடந்த பாராளுமன்றக் காலம் முடிவடையும் வரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே பாராளுமன்றக் குழு இயங்கிவந்தது. ஆனால், தேர்தல் வந்தபோது தனித்துப் போட்டியிட்டார்கள். உண்மையில் பாராளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது தவறானது. உள்ளூராட்சித் தேர்தலிலேயே தனித்துப் போட்டியிடுவது பயனுள்ளதாக அமையுமென்பது இந்தத் தேர்தலில் நிரூபணமாகியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்தவர்கள் சேர்ந்து இயங்கவேண்டிய நேரம் வந்துள்ளது. குறிப்பாக, எங்களுடைய பிரதேசத்தில் ஆறாயிரம் ஏக்கர் காணிகள் பறிபோகின்ற சூழல் உருவாகியுள்ளது.

நான் இது தொடர்பில் முன்னரும் குறிப்பிட்டிருந்தேன். மக்களின் ஆணையோடு ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றேன். மக்களின் காணிகளை சுவீகரிக்கும் வர்த்தமானி அறிவித்தலை உடனடியாக மீளக் கைவாங்குமாறு கோருகின்றேன். மே மாதம் 28ஆம் திகதி வரை அரசாங்கத்துக்கு காலக்கெடு கொடுத்திருக்கின்றேன்.

மே28ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்கம் குறித்த வர்த்தமானியை மீளப்பெறாதுவிட்டால் இதற்கு எதிரான பாரிய போராட்டமொன்றை நிகழ்த்துவோம். இந்நிலையில், ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் ஓர் அறிவிப்பை விடுக்கவுள்ளேன். வர்த்தமானி அறிவிப்புக்கெதிராக இணைந்து செயற்பட வேண்டும்.

கடந்த பாராளுமன்றத்திலேயே மாகாண சபைகள் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அது சில காரணங்களால் நிறைவேற்ற முடியாமல் போனது. ஆனால், தற்போதைய பாராளுமன்றத்தில் மாகாண சபைகள் திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் முயற்சித்தபோது, அதனை அரசாங்கமே கொண்டுவரும் என்ற வாக்குறுதியை ஜனாதிபதி அநுர வழங்கியிருந்தார். எனினும், ஆறுமாதங்கள் தாண்டியபோதும் அதில் எந்தவித முன்னேற்றமும் இல்லை.

இந்நிலையில், கடந்த மார்ச் மாதம் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் முன்னர் நான் கொண்டுவந்த அதே தனிநபர் சட்டமூலத்தை தனது தனிநபர் சட்டமூலமாகக் கொண்டுவருவதற்கான அறிவித்தலை பாராளுமன்றத்திடம் கொடுத்திருக்கிறார். எனவே, அடுத்த பாராளுமன்றக் கூட்டத்தொடரில் அந்தச் சட்டமூலம் கொண்டுவரப்படும். அந்தத் திருத்தத்தை மேற்கொண்டால் உடனடியாகவே மாகாண சபைத் தேர்தலை நடத்தமுடியும். மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்பது எங்களுடைய வேண்டுகோளாகவுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையைப் பொறுத்தவரையில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே அதிகளவான ஆசனம் கிடைக்கப்பெற்றது. ஆகையால், மாநகர முதல்வர் பதவி இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே உரித்தானது. ஏனைய கட்சிகள் அதனை அனுசரித்து எமக்கான ஆதரவை வழங்கவேண்டுமென்பது எங்களுடைய வேண்டுகோள். மாநகர முதல்வர் யார் என்பது குறித்து இதுவரை தீர்மானிக்கவில்லை.

சாவகச்சேரி நகர சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சிகள் இரண்டுக்கும் சமனான ஆசனம் கிடைத்திருக்கும் நிலையில், ஏனைய கட்சிகளே யார் ஆட்சியமைக்க வேண்டுமென்பதைத் தீர்மானிக்கக்கூடியதாக இருக்கும்.

வலி. வடக்கு பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தியினர் கணிசமான ஆசனங்களைப் பெற்றிருக்கிறார்கள். அது தொடர்பிலும் நாம் ஆராய வேண்டும். தேசிய மக்கள் சக்தியினரால் சில வாக்குறுதிகள் வழங்கப்பட்டதாகவும் தேர்தல் விதிமுறைகள் மீறப்பட்டதாகவும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அது தொடர்பிலும் ஆராய்வோம்.

தேர்தல் காலங்களில் இடம்பெற்ற விதிமுறை மீறல்களுக்கான நடவடிக்கைகளையெடுப்பது தொடர்பில் பலமான அழுத்தத்தைக் கொடுப்போம். விதிமுறை மீறல்களில் ஈடுபட்டவர்கள் மேல் தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தேயாகவேண்டும். அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளைப் பொறுத்தே இந்த ஆணைக்குழு சுயாதீனமானதா இல்லையா என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள்''- என்றார்.

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் - 2025

## தேர்தல் முடிவுகள் ஒரே பார்வையில்

## அம்பாறை மாவட்டம்

### அம்பாறை நகர சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 6,034 | 10 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,002 | 3 |
| சுயேச்சை குழு | 1,129 | 2 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 782 | 1 |
| மக்கள் கூட்டணி | 397 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 11,017 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 188 | |

### அக்கரைப்பற்று பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய காங்கிரஸ் | 2,081 | 5 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 892 | 1 |
| தேசிய மக்கள் சக்தி | 536 | 1 |
| சுயேச்சை குழு | 511 | 1 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 388 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 4,443 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 26 | |

### அக்கரைப்பற்று மாநகர சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய காங்கிரஸ் | 7,902 | 11 |
| தேசிய மக்கள் சக்தி | 3,584 | 4 |
| ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 3,133 | 3 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 2,066 | 2 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 969 | 1 |
| சுயேச்சை குழு | 424 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 18,078 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 114 | |

### தமன பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 9,667 | 10 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 4,367 | 4 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 2,701 | 2 |
| ஐக்கிய தேசிய கட்சி | 1,543 | 2 |
| செல்லுபடியான வாக்குகள் | 18,748 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 237 | |

### ஆலையடிவேம்பு பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| இலங்கை தமிழரசு கட்சி | 5,122 | 7 |
| தேசிய மக்கள் சக்தி | 5,070 | 7 |
| சுயேச்சை குழு | 1,800 | 2 |
| செல்லுபடியான வாக்குகள் | 12,333 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 114 | |

### இறக்காமம் பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 2,838 | 4 |
| தேசிய மக்கள் சக்தி | 2,003 | 3 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 1,732 | 2 |
| சுயேச்சை குழு-02 | 823 | 1 |
| மக்கள் கூட்டணி | 766 | 1 |
| தேசிய காங்கிரஸ் | 506 | 1 |
| சுயேச்சை குழு-01 | 443 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 9,380 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 59 | |

### மகாஓயா பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 4,974 | 7 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,707 | 4 |
| ஐக்கிய தேசிய கட்சி | 2,516 | 3 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 2,010 | 3 |
| சர்வசன அதிகாரம் | 361 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 12,998 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 129 | |

### உஹன பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 16,120 | 16 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 7,498 | 7 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 4,858 | 5 |
| ஐக்கிய தேசிய கட்சி | 1.280 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 30,325 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 452 | |

### திருக்கோவில் பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| சுயேச்சை குழு-1 | 7,829 | 8 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | 5,666 | 6 |
| தேசிய மக்கள் சக்தி | 1,068 | 1 |
| சுயேச்சை குழு-2 | 504 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 15,579 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 168 | |

### காரைதீவு பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 3,680 | 4 |
| தேசிய மக்கள் சக்தி | 2,481 | 3 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 1,490 | 2 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 1,100 | 1 |
| சுயேச்சை குழு | 479 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 9,910 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 55 | |

### லகுகலை பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 2,624 | 8 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,512 | 7 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 1,035 | 3 |
| செல்லுபடியான வாக்குகள் | 6,294 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 61 | |

### நிந்தவூர் பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 6,891 | 6 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 5,547 | 4 |
| தேசிய மக்கள் சக்தி | 2,684 | 2 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,182 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 16,313 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 126 | |

### சம்மாந்துறை பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 12,676 | 9 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 8,124 | 5 |
| தேசிய மக்கள் சக்தி | 3,990 | 2 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,540 | 2 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | 2,036 | 1 |
| தேசிய காங்கிரஸ் | 1,392 | 1 |
| சுயேச்சை குழு-03 | 1,121 | 1 |
| சுயேச்சை குழு-01 | 996 | 1 |
| சுயேச்சை குழு-02 | 805 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 34,067 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 356 | |

### அட்டாளைச்சேனை பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 10,865 | 8 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 5,851 | 4 |
| தேசிய மக்கள் சக்தி | 3,616 | 3 |
| தேசிய காங்கிரஸ் | 2,424 | 2 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 698 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 24,087 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 246 | |

### பதியத்தலாவை பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 4,432 | 7 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 3,574 | 6 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 1,881 | 3 |
| சர்வசன அதிகாரம் | 1,131 | 2 |
| மக்கள் கூட்டணி | 511 | 1 |
| ஐக்கிய தேசிய கட்சி | 375 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 12,029 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 160 | |

### பொத்துவில் பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| சுயேச்சை குழு-4 | 8,500 | 8 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 5,490 | 5 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | 1,650 | 2 |
| தேசிய மக்கள் சக்தி | 1,520 | 2 |
| சுயேச்சை குழு-1 | 1,492 | 1 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 976 | 1 |
| மக்கள் கூட்டணி | 732 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 21,718 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 152 | |

### நாவிதன்வெளி பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 4,154 | 5 |
| சுயேச்சை குழு-4 | 2,175 | 2 |
| சுயேச்சை குழு-1 | 1,351 | 2 |
| சுயேச்சை குழு-3 | 1,085 | 1 |
| இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் | 1,075 | 1 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 1,004 | 1 |
| தேசிய மக்கள் சக்தி | 940 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 12,178 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 118 | |

### நாமல்ஓயா பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 7,139 | 8 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 3,805 | 5 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 1,641 | 2 |
| சர்வசன அதிகாரம் | 546 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 13,592 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 197 | |

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 மே 08 ஆம் திகதி, வியாழக்கிழமை

# தேர்தல் சொன்ன செய்தி

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடந்து நேற்று மாலையுடன் தேர்தல் முடிவுகள் வெளிவந்துவிட்டன.

இழுபறியான நிலையிலிருந்த உள்ளூராட்சித் தேர்தல் ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் நடந்து முடிந்துள்ளது. ஆறு மாதங்களுக்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தலில் ஆளும் தரப்புக்குக் கிடைத்த மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை என்ற பெருவெற்றி, ஒருவகையில் குருட்டு அதிர்ஷ்டமோ என்று எண்ணத்தக்க நிலையை இப்போதைய தேர்தல் முடிவுகள் தந்து நிற்கின்றன.

எட்டு மாதங்களுக்கு முன்னர் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திசாநாயக்க வெற்றி பெற்றாராயினும் முதல் சுற்று வாக்கு எண்ணிக்கையில் அவரால் வெல்ல முடியவில்லை. ஆக 42 சதவீத வாக்குகளையே அவரால் - அவரது தேசிய மக்கள் சக்தியால் - பெற முடிந்தது.

ஆனால், இரண்டு மாதம் கழித்து கடந்த நவம்பர் நடுப்பகுதியில் நடந்த பொதுத் தேர்தலில் அவரது கட்சிக்கு அளப்பெரும் வெற்றி கிடைத்தது. தனித்து ஒரு கட்சி பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டிலும் விட அதிக பெரும்பான்மை வலுவைப்பெறும் சாதனை வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. ஆனால், அடுத்த ஆறு மாதங்களில் - நேற்றுமுன்தினம் - நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் அவரது ஆளுந்தரப்புக்கு பெரும் பின்னடைவைத் தந்திருப்பது கண்கூடு.

நாட்டில் தேர்தல் நடந்த 339 உள்ளூராட்சி மன்றங்களில் பெரும்பான்மை சபைகளில் - வட்டாரங்களில் அவரது கட்சிக்கு அதிக வெற்றி கிடைத்தாலும் அநேகமாக எல்லா சபைகளிலும் தனித்து ஆட்சியமைக்கும் வாய்ப்பை அவரது கட்சி இழந்து நிற்கின்றது. பாராளுமன்றத்தில் முழு அதிகாரத்தையும் நிறைவேற்ற அதிகார ஜனாதிபதி பதவியையும் ஒருங்குசேர வைத்திருக்கும் தேசிய மக்கள் சக்திக்கெதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தும் இயல்பாகவே தமக்குள் ஒன்றுபடும் காரணம் இருப்பதனால் பெரும்பாலான சபைகள் அனைத்தையும் எதிரணிகள் ஒன்றுபட்டு நிர்வாகத்தைக் கைப்பற்றும் நிலையே வந்திருக்கிறது. பாராளுமன்றின் ஆளும் தரப்பு, உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்திலும் எதிரணியில் அமரும் பரிதாபம் நேர்ந்திருக்கின்றது.எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் எல்லாம் ஊழல், மோசடிக்காரர்கள் என்று ஏற்கனவே பகிரங்கமாக தேசிய மக்கள் சக்தி அறிவித்திருப்பதால் அவர்களுடன் கூட்டிணைந்து எப்படி ஆட்சியமைப்பது என்ற கேள்வியும் எழுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திசாநாயக்கவுக்கு பாடம் போதித்த வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் - குறிப்பாக, வடக்கு மக்கள் - பாராளுமன்றத் தேர்தலில் அவரது கட்சிக்கு கணிசமான ஆதரவை நல்கினர்.

அந்த ஆதரவைத் தக்கவைக்கும் அணுகுமுறையை விடுத்து, தமிழர் விவகாரத்தில் அவரது கட்சி நடந்துகொண்ட திமிர்த்தனமான போக்கு, இந்த உள்ளூராட்சித் தேர்தலில் நல்ல பாடத்தை அவருக்குப் போதித்திருக்கின்றது.

வடக்கில் ஓரிரு இடங்களைத் தவிர மற்றைய இடங்களில் நிர்வாகத்தை அமைக்கும் முயற்சியைக் கூட எட்டுவதற்கான வாய்ப்பை தேசிய மக்கள் சக்திக்கு தமிழ் மக்கள் வழங்கவில்லை. தமிழ்த் தேசியத்தைத் தமிழர்கள் கைவிட மாட்டார்கள் என்று இந்தத் தேர்தலின் மூலம் அநுரவுக்கும் அவரது அணியினருக்கும் தெளிவான பாடம் உணர்த்தப்பட்டிருக்கின்றது.

வடக்கில் போஸ்டர்களில் குறிப்பிட்டது போல கோமாளி உறுப்பினர்கள், ரௌடி அமைச்சர்கள், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து திமிர்த்தனமாகப் பேசும் பிமல் ரத்நாயக்க போன்ற தலைவர்களின் புண்ணியத்தில் இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியம் திசைகாட்டியிடம் சரணாகதி அடையாமல் வெளியே வந்து தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது.

தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள் முரண்பட்டு நின்றாலும் - பிரிந்து நின்று தேர்தலை எதிர்கொண்டாலும் - தமிழ்த் தேசியத்துக்கு மாறான தடிப்பான நிலைப்பாட்டை எடுத்த தென்னிலங்கை ஆட்சிக்கு முறையான பதிலடி கொடுத்திருக்கின்றன.

ஜனாதிபதி அநுர உள்ளூராட்சித் தேர்தல் பிரசார செயற்பாட்டின்போது வடக்குக்கே அதிக தடவைகள் சென்றிருந்தார். தமிழர்கள் மீதான பாசத்தின் காரணமாகவோ அல்லது இன நல்லிணக்கம் என்ற அடிப்படையிலோ அவர் அங்கு செல்லவில்லை. பொருளாதார நெருக்கடியில் இருக்கும் இலங்கையை முன்னேற்ற சர்வதேச சமூகத்தின் ஆதரவு தேவை. ஏற்கனவே சீன ஆதரவுப் போக்கினால் தனித்துவிடப்பட்டுள்ள இந்த ஆட்சியாளர்களுக்கு மேற்குலகின் ஆதரவு தேவை. புதிய அரசியலமைப்பு பற்றிப் பேசுவதும் வடக்கு, கிழக்கில் தமிழர்களின் காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பது, மூடப்பட்ட வீதிகளைத் திறப்பது போன்றவாறான பல விடயங்களைச் செய்து தமிழர்களின் காவலனாகக் காட்டிக்கொள்ள முயன்று அதன் ஓர் அங்கமாகவே அப்பகுதிக்கு அடிக்கடி பயணித்தார் ஜனாதிபதி. கடந்த தேர்தல்களைப் போல இந்தத் தேர்தலிலும் அங்கே மக்கள் தோளில் தூக்கித் திரிவார்கள் என்ற பிழைப்பைக் கெடுக்கும் நினைப்பும் அரச தரப்பு அரசியல்வாதிகளுக்கு அங்கே இருந்தது.

ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் ஆளுங்கட்சிக்கு வந்த இறுமாப்பு, போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அந்தப் போரைப் பற்றி - அதன் தாக்கத்தைப் பற்றிப் பேசாமல் வெறுமனே அரசியல் செய்ய முயன்றதால்தான் இன்று இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தமிழர்களை வெறும் சலுகைகளை வழங்கி அவர்களின் மனங்களை வெல்லலாம் என்று நினைப்போருக்கு உச்சந் தலையில் கொட்டு விழுந்துள்ளது.

இனியாவது தமிழர் விவகாரத்தை அந்தத் தேசிய இனத்துக்கும் அந்தத் தேச மக்களுக்கும் உரிய மரியாதை கொடுக்கும் விதத்தில் தேசிய மக்கள் சக்தி அணுக வேண்டும். அதற்குரிய விதத்தில் விடயங்களைக் கையாள அந்தக் கட்சி முன்வர வேண்டும். தமிழ்த் தேசியத்தைப் புறந்தள்ளி, தமிழர் அபிலாஷைகளைப் புறந்தள்ளிச் செயற்பட்டால் என்ன நடக்குமென்பதற்கு இந்தத் தேர்தலை உதாரணமாகக் கொண்டு தமிழர் உணர்வுகளை, தேவைகளைப் புரிந்து அதற்கேற்ப செயற்படவேண்டும் அரசு.

வடக்கில் மட்டுமல்ல, கிழக்கிலும் மலையகத்திலும் கூட தமிழர்கள் செறிந்துவாழும் பகுதிகளில் ஏன், தென்னிலங்கை சிங்களப் பகுதிகளில் கூட சரிந்திருக்கும் ஆதரவு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மக்கள் ஆதரவு அதிகரிப்பு, சுயேச்சையாகப் போட்டியிட்டோர் பெற்ற ஆதரவு என்பவற்றைக் கருத்திற்கொண்டு தன்னை உடனடியாக சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும் தேசிய மக்கள் சக்தி. எதுவேண்டுமானாலும் பேசலாமென்றாலும் யதார்த்தபூர்வமாகவே நடந்துகொள்ளவேண்டுமென்பதை ஆளுங்கட்சி உணரும் நேரமிது.



# தொடரும் சாதனை வெற்றி!

சிங்கப்பூர் பாராளுமன்றத்துக்கு அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆளும் மக்கள் செயல் கட்சி (பி.ஏ.பி.) அபார வெற்றிபெற்று ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது. ஜனநாயக நாடுகளில் ஒரு கட்சி தொடர்ந்து 60 ஆண்டுகளாக ஆட்சியில் நீடித்து வருகிறதென்றால் அந்தக் கட்சி மீது மக்கள் எந்தளவுக்கு நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதை தேர்தல் முடிவு வெளிப்படுத்தியிருக்கிறது.

மலேசியாவின் ஆதிக்கத்தில் இருந்த சிங்கப்பூர் கடந்த 1965ஆம் ஆண்டு சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டது. சிங்கப்பூர் சுதந்திரமடைந்த பிறகு பாராளுமன்றத்துக்கு நடைபெற்ற 14ஆவது பொதுத் தேர்தல் இது. அதேநேரத்தில், மலேசியாவின் ஆதிக்கத்தில் இருந்தபோதே, கடந்த 1948 முதல் சிங்கப்பூர் பாராளுமன்றத்துக்கு நடைபெற்ற தேர்தல்களையும் கணக்கில் கொண்டால், இது 19ஆவது பொதுத் தேர்தலாகும்.

மொத்தம் 97 இடங்களுக்கு நடைபெற்ற இந்தத் தேர்தலில் ஆளும் பி.ஏ.பி. கட்சி 87 இடங்களைக் கைப்பற்றி புதிய வரலாறு படைத்திருக்கிறது. எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி 10 இடங்களில் மட்டுமே வெற்றிபெற முடிந்தது. சுதந்திரமடைந்த பிறகு சிங்கப்பூர் பாராளுமன்றத்துக்கு நடைபெற்ற அனைத்து பொதுத் தேர்தல்களிலும் அதாவது, கடந்த 60 ஆண்டுகளாக மக்கள் செயல் கட்சி தொடர்ந்து வெற்றி பெற்று ஆட்சியில் உள்ளதென்பது மிகப்பெரிய சாதனை என்பதில் சந்தேகமில்லை.

மொத்தம் சுமார் 60 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட மிகச் சிறிய தீவு நாடுதான் சிங்கப்பூர். அண்மையில் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் மொத்தமுள்ள 26,27,026 வாக்காளர்களில் 24,29,281 பேர் வாக்களித்தனர். அதாவது, சுமார் 92 சதவீத வாக்காளர்கள் தங்களது வாக்குகளைச் செலுத்தினர்.

தொழில்நுட்ப ரீதியாக சிங்கப்பூர் மிகப் பெரிய வளர்ச்சியைப் பெற்றிருந்தாலும் வாக்குச்சீட்டு முறையில்தான் தேர்தல் நடைபெற்றது. மிகக் குறைந்தளவு வாக்காளர்களைக் கொண்ட நாடு என்பதால் சிங்கப்பூரில் இன்னமும் வாக்குச் சீட்டு முறையிலான தேர்தல்தான் நடைபெறுகிறது.

அமெரிக்கா-சீனா இடையிலான வர்த்தகப் போர்ப் பதற்றம் காரணமாக உலகில் பொருளாதார மந்தநிலை ஏற்படலாமென்றும் இது சிங்கப்பூரின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்குமென்றும் கருதப்பட்டது. இந்தப் பின்னணியில், சிங்கப்பூர் பாராளுமன்றத் தேர்தலில் இந்தத் தடவை ஆளும் பி.ஏ.பி. கட்சிக்கு தொழிலாளர் கட்சி தலைமையிலான எதிர்க்கட்சிகள் கூட்டணி பெரும் சவாலாக இருக்குமெனக் கணிக்கப்பட்டிருந்தது.

சிங்கப்பூரில் வாழ்க்கைச் செலவினம் அதிகரிப்பு, அனைத்துத் துறைகளிலும் சிங்கப்பூர்வாசிகள் அல்லாத பிற நாட்டவர்களின் ஆதிக்கம் மேலோங்கியிருப்பது உள்ளிட்ட விவகாரங்களை முன்வைத்து எதிர்க்கட்சிகள் தீவிர பிரசாரம் மேற்கொண்டன. அனைத்துக் கணிப்புகளையும் பொய்யாக்கி ஆளும் பி.ஏ.பி. கட்சி 87 இடங்களைக் கைப்பற்றி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

அரசியல் ஸ்திரத்தன்மை, பொருளாதாரப் பாதுகாப்பு உள்ளிட்ட காரணங்களுக்காக சிங்கப்பூர் மக்கள் மீண்டும் பி.ஏ.பி. கட்சியையே தேர்ந்தெடுத்துள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கூறுவதை மறுப்பதற்கில்லை. பி.ஏ.பி. கட்சித் தலைவர்களின் தொலைநோக்குப் பார்வையால்தான் உலக அரங்கில் சிங்கப்பூர் பொருளாதார வல்லமைமிக்க நாடாகத் தொடர்ந்து நீடிப்பதாக அந்த மக்கள் நம்புகின்றனர். இதுதான் பி.ஏ.பி. கட்சியின் தொடர் வெற்றிக்கு முக்கிய காரணம்.

சிங்கப்பூர் பிரதமராக 20 ஆண்டுகளாகப் பதவியில் நீடித்த பி.ஏ.பி. கட்சியின் மூத்த தலைவர் லீ சியன்லூங் கடந்த ஆண்டு, மே மாதம் பதவியிலிருந்து விலகினார். இதையடுத்து, அந்த நாட்டின் பிரதமராகப் பொறுப்பேற்ற லாரன்ஸ் வாங் தலைமையில் பி.ஏ.பி. கட்சி எதிர்கொண்ட முதலாவது பொதுத் தேர்தல் இதுவாகும்.

இந்தத் தேர்தலில் சிங்கப்பூர் மக்கள் அளித்துள்ள தீர்ப்பு, பி.ஏ.பி. கட்சி மீது அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளதாக பிரதமர் லோரன்ஸ் வாங் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார். இந்த மகத்தான வெற்றியின் மூலம், பி.ஏ.பி. கட்சி இன்னும் கடுமையாக உழைக்க வேண்டுமென்பதை மக்கள் உணர்த்தியுள்ளதாகவும் அவர்களது எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் சிங்கப்பூரின் வளர்ச்சிக்கு பி.ஏ.பி. கட்சி தொடர்ந்து அயராது பாடுபடுமென்றும் பிரதமர் லோரன்ஸ் வாங் கூறியுள்ளார்.

சிங்கப்பூரில் தொடர்ந்து 60 ஆண்டுகளாக பி.ஏ.பி. கட்சி ஆட்சியில் நீடித்து வருவதால், மாற்றுக் கருத்துகளுக்கு இடமளிக்காமல் அந்தக் கட்சி சர்வாதிகாரத்துடன் செயற்பட்டு வருவதாக எதிர்க்கட்சிகள் முன்வைத்த குற்றச்சாட்டுகளை மக்கள் புறக்கணித்துவிட்டதையே இந்தத் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

மேலும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்த கூடுதல் வரி விதிப்பு நடவடிக்கையால் சிங்கப்பூர் பெரியளவில் பாதிக்கப்படுமென்பதால் இதைச் சமாளித்து பி.ஏ.பி. கட்சியால் மட்டுமே ஸ்திரமான பொருளாதார வளர்ச்சியை நிலைநிறுத்த முடியுமென மக்கள் நம்பியதால்தான் அந்தக் கட்சியால் இந்தளவுக்கு அமோக வெற்றியைப் பெற முடிந்துள்ளது.

ஆசிய நாடுகளில் சீனா, ஜப்பான், இந்தியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகள்தான் பொருளாதார வளர்ச்சியில் முன்னணியில் உள்ளன. அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்ற பிறகு எடுத்துவரும் அதிரடி நடவடிக்கைகளால் உலகில் பொருளாதார மந்தநிலை ஏற்படக் கூடுமென்ற அச்சம் மேலோங்கியுள்ளது. ஸ்திரமான அரசால் மட்டுமே எந்தவொரு நிலைமையையும் உறுதியுடன் சமாளிக்க முடியுமென்ற வாக்காளர் மனநிலையின் வெளிப்பாடுதான் பிரதமர் லோரன்ஸ் வாங்கின் வெற்றி.

*நன்றி - தினமணி*

# தமிழரசில் செய்யப்படவேண்டிய உடனடியான மாற்றங்கள்!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தனது அரசியல் நிலைப்பாடுகளில் மெய்யான மாற்றங்கள் சிலவற்றைக் கொண்டுவரவேண்டும். குறிப்பாக, ஒற்றையாட்சியை வலுப்படுத்தும் ஏக்கிய ராச்சியவைக் கைவிடல், போர்க்குற்ற விசாரணை முடிந்துவிட்டது. இங்கு நடந்தது இனவழிப்பல்ல என்கிற கதைகளைக் கைவிடல், வடக்கு-கிழக்கு இணைந்த மரபுவழித் தமிழர் நிலத்தைத் தமிழர் தேசமாக உளப்பூர்வமாக ஏற்றல், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் நிகழும் குடுமிப்பிடிச் சண்டைகளை முடிவுக்குக் கொண்டுவரல், அதற்காகத் தொடரப்பட்டுள்ள நீதிமன்ற வழக்குகளை மீளப்பெறல் எனப் பல மாற்றங்களை அவர் செய்யவேண்டியிருக்கிறது.

தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்பிருந்தே மு.பா.உ. சுமந்திரன் தரப்பால் கடுமையாக விமர்சிக்கப்படுகிறார்; புறமொதுக்கப்படுகிறார். இதன் உச்சத்தை அண்மையில் இடம்பெற்ற மே தினக் கூட்டத்திலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளைச் சந்திக்கச் சென்ற நேரத்திலும் பா.உ. சிறீதரனுக்கு நடந்தவற்றையும் பார்த்திருப்போம். சொந்தக் கட்சிக்குள்ளேயே இவ்வளவு சதிகள் நடக்கும்போதும்கூட தனியொருவனாக நின்று கிளிநொச்சி மாவட்டத்தின் அத்தனை உள்ளூராட்சி சபைகளையும் தமிழரசுக்கட்சி வசப்படுத்தியிருக்கிறார் அவர். எனவே, இங்கு தமிழரசுக் கட்சியின் மக்கள் செல்வாக்குள்ள பெருந்தலை பா.உ.சிறீதரன்தான். இந்தக் கள யதார்த்தத்தை விளங்கிக்கொண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியை வழிநடத்தும் பொறுப்பை அவரிடம் கையளிக்க வேண்டும்.

| ஈழ மக்கள் ஜனநாயக கட்சி | 650 | 01 |

செல்லுபடியான வாக்குகள் 24,650
நிராகரிக்கப்பட்ட வாக்குகள் 429

### நல்லூர் பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 5,576 | 07 |

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தமிழ் மக்கள் கூட்டணி | 4,921 | 06 |
| தேசிய மக்கள் சக்தி | 2820 | 03 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 2,095 | 03 |
| ஈழ மக்கள் ஜனநாயக கட்சி | 986 | 01 |

செல்லுபடியான வாக்குகள் 16,888
நிராகரிக்கப்பட்ட வாக்குகள் 290

## களுத்துறை மாவட்டம்

### ஹொரணை நகர சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 2,131 | 06 |
| INDG 01 சுயேச்சைக்குழு 01 | 1,131 | 02 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 913 | 02 |
| ஐக்கிய தேசிய கட்சி | 854 | 02 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 271 | 01 |

செல்லுபடியான வாக்குகள் 5,519
நிராகரிக்கப்பட்ட வாக்குகள் 136

### களுத்துறை மாநகர சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 13,945 | 12 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 9,290 | 08 |
| ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 3,562 | 03 |
| ஐக்கிய தேசிய கட்சி | 3,048 | 03 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 1,550 | 01 |
| மக்கள் கூட்டணி | 1,417 | 01 |
| தேசிய சுதந்திர முன்னணி | 905 | 01 |
| INDG சுயேச்சைக்குழு | 857 | 01 |
| சர்வசன அதிகாரம் | 574 | 01 |

செல்லுபடியான வாக்குகள் 35,548
நிராகரிக்கப்பட்ட வாக்குகள் 542

### பாணந்துறை நகர சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 6,642 | 10 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,925 | 02 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 1,721 | 02 |
| ஐக்கிய தேசிய கட்சி | 1,042 | 01 |
| நவ லங்கா சுதந்திர கட்சி | 639 | 01 |
| தேசிய சுதந்திர முன்னணி | 637 | 01 |
| சர்வசன அதிகாரம் | 619 | 01 |

செல்லுபடியான வாக்குகள் 13,575
நிராகரிக்கப்பட்ட வாக்குகள் 261

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் - 2025

## தேர்தல் முடிவுகள் ஒரே பார்வையில்

### மத்துகம பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 17,698 | 13 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 13,551 | 10 |
| சுயேச்சைக்குழு | 4,980 | 04 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 4,827 | 03 |
| தேசிய சுதந்திர முன்னணி | 2,084 | 01 |
| ஐக்கிய தேசிய கட்சி | 1,332 | 01 |
| மக்கள் போராட்ட முன்னணி | 766 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 45,238 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 910 | |

### புளத்சிங்ஹல பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 11,933 | 09 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 7,396 | 06 |
| சுயேச்சைக்குழு-02 | 7,243 | 06 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 3,400 | 03 |
| ஐக்கிய தேசிய கட்சி | 1,512 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 32,556 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 649 | |

### பாலிந்தநுவர பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| ஐக்கிய மக்கள் சக்தி | 11,592 | 09 |
| தேசிய மக்கள் சக்தி | 8,700 | 07 |
| சுயேச்சைக்குழு | 4,054 | 03 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 1,805 | 02 |
| மக்கள் கூட்டணி | 1,287 | 01 |
| சர்வசன அதிகாரம் | 1,075 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 29,096 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 548 | |

### மதுராவல பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 6,530 | 05 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 4,054 | 03 |
| ஐக்கிய தேசிய கட்சி | 3,151 | 03 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 2,390 | 02 |
| சுயேச்சைக்குழு | 1,151 | 01 |
| மக்கள் கூட்டணி | 786 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 19,191 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 447 | |

### களுத்துறை பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 22,302 | 15 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 10,385 | 06 |
| மக்கள் கூட்டணி | 7,163 | 04 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 2,587 | 02 |
| ஐக்கிய தேசிய கட்சி | 2,291 | 01 |
| தேசிய சுதந்திர முன்னணி | 1,752 | 01 |
| நவ லங்கா சுதந்திர கட்சி | 1,651 | 01 |
| மக்கள் போராட்ட முன்னணி | 1,083 | 01 |
| சர்வசன அதிகாரம் | 753 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 49,967 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 976 | |

### அகலவத்தை பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 6,397 | 06 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 6,147 | 06 |
| சுயேச்சைக்குழு-01 | 3,715 | 03 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 2,476 | 02 |
| மக்கள் கூட்டணி | 858 | 01 |
| ஐக்கிய தேசிய கட்சி | 799 | 01 |
| சர்வசன அதிகாரம் | 575 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 21,181 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 385 | |

### ஹொரணை பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 39,638 | 30 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 13,256 | 09 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 8,287 | 05 |
| ஐக்கிய தேசிய கட்சி | 6,800 | 04 |
| சர்வசன அதிகாரம் | 6,696 | 04 |
| சுயேச்சைக்குழு | 4,431 | 03 |
| செல்லுபடியான வாக்குகள் | 79,355 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,817 | |

### பேருவளை நகர சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| சுயேச்சைக்குழு 01 | 9,757 | 07 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 7,872 | 06 |
| தேசிய மக்கள் சக்தி | 4,229 | 03 |
| செல்லுபடியான வாக்குகள் | 22,328 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 277 | |

### பாணந்துறை பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 35,177 | 22 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 14,445 | 09 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 9,843 | 06 |
| ஐக்கிய தேசிய கட்சி | 5,580 | 03 |
| சர்வசன அதிகாரம் | 4,308 | 03 |
| சுயேச்சைக்குழு-02 | 2,489 | 01 |
| மக்கள் கூட்டணி | 1,804 | 01 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 1,437 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 76,648 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,475 | |

### பேருவளை பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 29,231 | 20 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 15,859 | 10 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 7,607 | 05 |
| மக்கள் கூட்டணி | 4,564 | 03 |
| ஐக்கிய தேசிய கட்சி | 4,277 | 03 |
| நவ லங்கா சுதந்திர கட்சி | 1,486 | 01 |
| தேசிய சுதந்திர முன்னணி | 1,018 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 65,518 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,278 | |

### பண்டாரகம பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 27,445 | 16 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 12,619 | 07 |
| மக்கள் கூட்டணி | 7,675 | 04 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 4,726 | 03 |
| ஐக்கிய தேசிய கட்சி | 2,651 | 02 |
| தேசிய சுதந்திர முன்னணி | 2,113 | 01 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 1,222 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 59,026 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,100 | |

### வல்லாவிட்ட பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 12,031 | 12 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 8,114 | 06 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 4,273 | 03 |
| ஐக்கிய தேசிய கட்சி | 2,973 | 02 |
| மக்கள் கூட்டணி | 1,143 | 01 |

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| சர்வசன அதிகாரம் | 549 | 01 |
| மக்கள் போராட்ட முன்னணி | 531 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 30,056 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 511 | |

### தொடங்கொட பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 14,473 | 12 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 7,156 | 05 |
| சுயேச்சைக்குழு | 4,129 | 03 |
| சர்வசன அதிகாரம் | 3,284 | 02 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 1,909 | 01 |
| ஐக்கிய தேசிய கட்சி | 1,594 | 01 |
| தேசிய சுதந்திர முன்னணி | 722 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 33,656 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 679 | |

### மில்லெனிய பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 11,125 | 09 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 6,976 | 05 |
| மக்கள் கூட்டணி | 4,807 | 03 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 3,853 | 03 |
| தேசிய மக்கள் கட்சி | 1,198 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 29,650 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 564 | |

## கொழும்பு மாவட்டம்

### கொழும்பு மாநகர சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 81,814 | 48 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 58,375 | 29 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 26,297 | 13 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 9,341 | 05 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 8, 630 | 04 |
| சுயேச்சைக்குழு 3 | 5, 934 | 03 |
| சுயேச்சைக்குழு 5 | 4,659 | 02 |
| ஐக்கிய சமாதான கூட்டமைப்பு | 4,473 | 02 |
| சர்வஜன அதிகாரம் | 3,911 | 02 |
| சுயேச்சைக்குழு 4 | 3, 640 | 02 |
| மக்கள் கூட்டணி | 2,754 | 01 |
| தேசிய சுதந்திர முன்னணி | 2,398 | 01 |
| ஐக்கிய குடியரசு முன்னணி | 2, 157 | 01 |
| சுயேச்சைக்குழு 1 | 1,909 | 01 |
| சுயேச்சைக்குழு 2 | 1,791 | 01 |

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் - 2025

## தேர்தல் முடிவுகள் ஒரே பார்வையில்

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| ஜனநாயக தேசிய முன்னணி | 1,370 | 01 |
| தேசிய மக்கள் கட்சி | 950 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 221,624 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 5, 609 | |

### பொரலஸ்கமுவ நகர சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 12,283 | 10 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 3,349 | 02 |
| மக்கள் கூட்டணி | 2,030 | 01 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 1,647 | 01 |
| சர்வஜன அதிகாரம் | 1,183 | 01 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 816 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 23,004 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 421 | |

### ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 19,417 | 21 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 8,002 | 07 |
| மக்கள் கூட்டணி | 3,683 | 03 |
| சர்வஜன அதிகாரம் | 2,919 | 02 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 2,664 | 02 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,223 | 02 |
| ஐக்கிய குடியரசு முன்னணி | 904 | 01 |
| ஐக்கிய தேசிய கூட்டணி | 659 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 40,471 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 766 | |

### தெஹிவளை-கல்கிசை மாநகர சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 33,764 | 29 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 14,608 | 10 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 7,555 | 05 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 6,242 | 04 |
| சர்வஜன அதிகாரம் | 4,508 | 03 |
| மக்கள் கூட்டணி | 2,172 | 02 |
| சுயேச்சைக்குழு | 638 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 70,681 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,317 | |

### கொலன்னாவ நகர சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 11,099 | 09 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 7,848 | 06 |

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,955 | 02 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 1,473 | 01 |
| சர்வஜன அதிகாரம் | 857 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 25,265 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 590 | |

### மஹரகம நகர சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 40,890 | 24 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 12,000 | 06 |
| சுயேச்சைக்குழு 01 | 5,627 | 03 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 5,247 | 03 |
| சர்வஜன அதிகாரம் | 4,233 | 02 |
| சுயேச்சைக்குழு 04 | 2,728 | 02 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,545 | 01 |
| சுயேச்சைக்குழு 03 | 1,763 | 01 |
| சுயேச்சைக்குழு 02 | 1,388 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 77,992 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,487 | |

### கெஸ்பேவ நகர சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 48,485 | 20 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 14,395 | 05 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 7,544 | 03 |
| சுயேச்சைக்குழு 02 | 4,022 | 02 |
| சர்வஜன அதிகாரம் | 3,490 | 01 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 3,035 | 01 |
| மக்கள் கூட்டணி | 1,800 | 01 |
| தேசிய சுதந்திர முன்னணி | 1,341 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 86,387 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,813 | |

### மொரட்டுவை மாநகர சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 34,659 | 26 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 16,814 | 11 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 9,149 | 06 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 4,809 | 03 |
| சர்வஜன அதிகாரம் | 3,640 | 02 |
| மக்கள் கூட்டணி | 2,779 | 02 |
| சுயேச்சைக்குழு | 1,522 | 01 |

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய சுதந்திர முன்னணி | 617 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 75,791 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,286 | |

### கடுவெல மாநகர சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 60,537 | 26 |
| சுயேச்சைக்குழு | 19,455 | 08 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 12,571 | 05 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 6,667 | 03 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 4,676 | 02 |
| சர்வஜன அதிகாரம் | 3,668 | 01 |
| தேசிய சுதந்திர முன்னணி | 2,422 | 01 |
| மக்கள் கூட்டணி | 1,227 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 1,13,233 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,022 | |

### ஹோமாகம பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 66,634 | 28 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 19,376 | 07 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 14,575 | 06 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 6,259 | 02 |
| சர்வஜன அதிகாரம் | 3,989 | 02 |
| மக்கள் கூட்டணி | 3,013 | 01 |
| சுயேச்சைக்குழு | 2,381 | 01 |
| தேசிய சுதந்திர முன்னணி | 1,321 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 1,19,360 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,194 | |

### சீதாவக்கபுர நகர சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 5,553 | 11 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 4,025 | 06 |
| சுயேச்சைக்குழு 2 | 2,457 | 04 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 889 | 01 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 574 | 01 |
| சர்வஜன அதிகாரம் | 548 | 01 |
| சுயேச்சைக்குழு 1 | 318 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 14,759 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 297 | |

### சீதாவக்க பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 30,250 | 23 |

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| ஐக்கிய மக்கள் சக்தி | 13,270 | 08 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 10,855 | 07 |
| சுயேச்சைக்குழு 03 | 5,614 | 03 |
| சர்வஜன அதிகாரம் | 2,849 | 02 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,613 | 02 |
| தேசிய சுதந்திர முன்னணி | 1,304 | 01 |
| மக்கள் கூட்டணி | 863 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 69,236 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,371 | |

### கொட்டிகாவத்தை முல்லேரியாவ பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 30,797 | 22 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 10,747 | 07 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 5,477 | 03 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 3,745 | 02 |
| மக்கள் கூட்டணி | 2,289 | 01 |
| சர்வஜன அதிகாரம் | 1,330 | 01 |
| ஐக்கிய சமாதான கூட்டமைப்பு | 1,160 | 01 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 908 | 01 |
| சுயேச்சைக்குழு | 697 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 58,423 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,212 | |

## காலி மாவட்டம்

### அம்பலாங்கொட நகர சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 5,736 | 11 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,934 | 05 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 1,928 | 03 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 553 | 01 |
| சுயேச்சைக்குழு | 552 | 01 |
| சர்வஜன அதிகாரம் | 447 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 12,287 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 275 | |

### யக்கலமுல்ல பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 11,684 | 12 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 6,853 | 05 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 3,236 | 03 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,967 | 02 |
| சர்வஜன அதிகாரம் | 889 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 24,789 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 466 | |

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் - 2025

## தேர்தல் முடிவுகள் ஒரே பார்வையில்

### ஹிக்கடுவ நகரசபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 6,133 | 09 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 3,159 | 04 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 1,820 | 02 |
| சர்வசன அதிகாரம் | 1,487 | 02 |
| தேசிய சுதந்திர முன்னணி | 993 | 01 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 940 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 14,642 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 283 | |

### போப்பே போத்தல பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 16,828 | 11 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 7,297 | 04 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 4,444 | 03 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,511 | 02 |
| INDG சுயேச்சைக்குழு | 2,217 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 33,546 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 694 | |

### பெந்தோட்டை பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 10,028 | 10 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 6,108 | 05 |
| INDG 02 சுயேச்சைக்குழு 2 | 3,015 | 02 |
| INDG 01 சுயேச்சைக்குழு 1 | 2,484 | 02 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 1,872 | 02 |
| மக்கள் கூட்டணி | 1,817 | 01 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,577 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 27,765 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 454 | |

### கரந்தெனிய பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 17,573 | 12 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 4,870 | 03 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 4,585 | 03 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,097 | 01 |
| சர்வசன அதிகாரம் | 1,967 | 01 |
| மக்கள் போராட்ட முன்னணி | 1,303 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 32,395 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 367 | |

### நியாகம பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 8,506 | 09 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 5,013 | 04 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 3,986 | 03 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,537 | 01 |
| மக்கள் கூட்டணி | 981 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 20,234 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 369 | |

### ஹபராதுவ பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 13,805 | 14 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 7,313 | 06 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 5,667 | 05 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,812 | 01 |
| சர்வசன அதிகாரம் | 994 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 29,992 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 517 | |

### காலி மாநகர சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 20,330 | 17 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 12,308 | 09 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 7,106 | 05 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 3,725 | 03 |
| மக்கள் கூட்டணி | 1,887 | 02 |
| செல்லுபடியான வாக்குகள் | 45,717 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 771 | |

### நெலுவ பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 6,213 | 06 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 5,009 | 05 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 2,613 | 03 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,188 | 01 |
| சர்வசன அதிகாரம் | 443 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 15,466 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 262 | |

### அம்பலாங்கொட பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 14,000 | 11 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 8,222 | 05 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 4,779 | 03 |
| INDG சுயேச்சைக்குழு | 2,583 | 02 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,851 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 32,779 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 694 | |

### பலப்பிட்டிய பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 15,278 | 16 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 6,539 | 06 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 5,518 | 05 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 4,137 | 04 |
| இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி | 2,218 | 02 |
| மக்கள் கூட்டணி | 1,085 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 34,775 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 548 | |

### தவலம பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 6,640 | 10 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 4,066 | 04 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 3,028 | 03 |
| சர்வசன அதிகாரம் | 2,389 | 02 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,612 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 17,735 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 361 | |

### வெலிவிட்டிய திவித்துர பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 7,304 | 07 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 3,883 | 04 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 2,076 | 02 |
| சர்வசன அதிகாரம் | 1,498 | 01 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,317 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 16,703 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 335 | |

### இமதுவ பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 11,177 | 10 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 5,338 | 04 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 2,961 | 02 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,790 | 01 |
| இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி | 658 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 22,896 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 382 | |

### ரத்கம பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 14,701 | 14 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 8,627 | 06 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 5,798 | 04 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,510 | 02 |
| நவ லங்கா சுதந்திர கட்சி | 2,413 | 02 |
| சர்வசன அதிகாரம் | 1,738 | 01 |
| INDG 02 சுயேச்சைக்குழு 2 | 1,247 | 01 |
| மக்கள் கூட்டணி | 1,008 | 01 |
| INDG 01 சுயேச்சைக்குழு 1 | 849 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 39,534 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 656 | |

### நாகொட பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 11,348 | 11 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 7,625 | 06 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 5,898 | 05 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,777 | 02 |
| மக்கள் கூட்டணி | 1,324 | 01 |
| சர்வசன அதிகாரம் | 864 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 30,104 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 723 | |

### பத்தேகம பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 16,903 | 16 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 10,659 | 08 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 5,429 | 04 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,758 | 02 |
| சர்வசன அதிகாரம் | 2,191 | 02 |
| INDG சுயேச்சைக்குழு | 1,845 | 01 |
| மக்கள் போராட்ட முன்னணி | 1,233 | 01 |
| இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி | 992 | 01 |
| செல்லுபடியான வாக்குகள் | 42,010 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 882 | |

ஏனைய மாவட்டங்களின் தேர்தல் முடிவுகள் நாளை (09) 'தமிழன்' நாளிதழில் தொடரும்




# ‘ஒபரேஷன் சிந்தூர்’; கட்டவிழ்த்த இந்தியா

## பாகிஸ்தான் மீது நள்ளிரவில் 25 நிமிடங்கள் நீடித்த தாக்குதல்

காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காம் பகுதியில் கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலுக்குப் பதிலடியாக பாகிஸ்தானிலுள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா நேற்று (07) அதிரடித் தாக்குதல் நடத்தியுள்ளது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலுள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலுக்கு ‘ஒபரேஷன் சிந்தூர்’ எனப் பெயரிடப்பட்டுள்ளது. இத் தாக்குதல் நடவடிக்கையின்போது எல்லையில் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயற்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா வான்வழி துல்லிய தாக்குதல் நடத்தியது. இதில், 80இற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். குறிப்பாக, ஜெய்ஷ்-இ-முஹமது பயங்கரவாத அமைப்பின் முக்கிய கோட்டையான பஹாவல்பூத் மீதான தாக்குதலில் அந்த அமைப்பின் தலைவர் மசூத் அசாரின் சகோதரி, மைத்துனர் உட்பட அவரது குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவின் ‘ஒபரேஷன் சிந்தூர்’ தாக்குதலைத் தொடர்ந்து எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தாக்குதலில் இந்திய குடிமக்கள் 6 பேர் உயிரிழந்தனர்; 38இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

**உரிய பதிலடி கொடுக்கப்படும் – பாக். பிரதமர்**

இந்நிலையில், இந்தியாவின் தாக்குதலை போர் நடவடிக்கையாகவே பார்ப்பதாக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார். மேலும், இந்தத் தாக்குதலுக்கு உரிய நேரத்தில் தகுந்த பதிலடி கொடுக்கப்படுமெனத் தெரிவித்திருந்தார். அதன்படி தாக்குதலையும் பாகிஸ்தான் தொடங்கியுள்ளது.

பஹல்காம் தாக்குதலுக்கு சரியான பதிலடி கொடுக்க திட்டமிட்டு நேற்று (07) நாடு தழுவிய போர்க் கால ஒத்திகை நடத்த இந்திய மத்திய அரசு அறிவித்தது. இந்நிலையில், இந்திய இராணுவம் நேற்று (07) அதிகாலை ‘ஒபரேசன் சிந்தூர்’ என்ற பெயரில் பயங்கரவாதிகளின் 9 முகாம்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியுள்ளது.

பொதுவாக போர் ஒத்திகை நடத்தப்பட்டால் அதன்பின் இரண்டு - மூன்று நாட்களில் அல்லது சில நாட்கள் கழித்தே போர் தொடங்கும். அதேபோன்று ஒத்திகைக்கு பின்புதான் இந்தியா போரை தொடங்குமென பாகிஸ்தான் நம்பியிருந்த நிலையில், இந்திய இராணுவம் மிகவும் சாதுர்யமாக இரவோடு இரவாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் விமானம் மூலம் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளது. இத்தாக்குதலால் பாகிஸ்தான நிலைகுலைந்து போயுள்ளது. இதனால் இரு நாடுகளிடையே பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்திய இராணுவத் தாக்குதலை பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் உறுதிப்படுத்தியுள்ளதையடுத்து லாகூர், சியல்கோட் விமான நிலையங்களை அடுத்த 48 மணி நேரத்துக்குப் பாகிஸ்தான் மூடியுள்ளது.

**அவசர நிலை பிரகடனம்**

பாகிஸ்தானில் லாகூர், சியல்கோட் மற்றும் நம் அண்டை மாகாணமான பஞ்சாப் மாகாணத்தில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது

**‘‘நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது: ஜெய்ஹிந்த்’’**

தாக்குதலைத் தொடர்ந்து நீதி நிலை நாட்டப்பட்டுள்ளதாக இந்திய இராணுவம் தன்னுடைய எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளது. அதில் தெரிவித்திருப்பதாவது,

‘‘பயங்கரவாதிகளின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதேநேரத்தில் பாகிஸ்தான் இராணுவநிலைகள் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை. நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது; ஜெய்ஹிந்த்’’ என பதிவிட்டுள்ளது.

**ட்ரம்ப் கருத்து:** ஒபரேஷன் சிந்தூர் தாக்குதலை இந்தியா கட்டவிழ்த்துள்ள நிலையில், “இந்தப் பதற்றம் விரைவில் முடிவுக்கு வருமென நம்புகிறேன்” என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அதேபோல் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டேரஸ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், “இந்தியாவும் பாகிஸ்தானும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும்” என்று வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் ஆகியோரிடம் கள நிலைவரம் குறித்து பிரதமர் மோடி கேட்டறிந்தார். முன்னதாக பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இலக்குகள், தாக்குதல் நடத்தும் முறை மற்றும் நேரம் குறித்து முடிவுசெய்ய ஆயுதப் படைகளுக்கு பிரதமர் மோடி முழு சுதந்திரத்தை வழங்கியிருந்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தை தொடர்ந்து பிரதமர் மோடி, ஜனாதிபதி திரௌபதி முர்முவை நேரில் சந்தித்து ‘ஒபரேஷன் சிந்தூர்’ குறித்து விளக்கமளித்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

**உத்தரவிட்டவர் யார்?**

இரு நாடுகளிடையில் பதற்றம் நிலவி வந்த நிலையில்,நேற்றுமுன்தினம் நள்ளிரவில் தேசிய பாதுகாப்புத் துறை செயலர் அஜித் டோவல் விமானப் படையினருக்கு உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இதனைத் தொடர்ந்து இந்தியப் படை பாகிஸ்தான் இலக்குகள்மீது




குண்டு மழை பொழிந்துள்ளது.

**தாக்குதல் ஏன்?**

தாக்குதல் குறித்து வெளியுறவுச் செயலர் விக்ரம் மிஷ்ரி தெரிவிக்கையில், பயங்கர வாதிகளின் புகலிடமாக பாகிஸ்தான் விளங்குகிறது. இதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. காஷ்மீர் வளர்ச்சியைத் தடுக்கவே பயங்கரவாதிகள் பஹல்காமில் தாக்குதல் நடத்தினர். மேலும், பல பயங்கர வாத தாக்குதலை நடத்த சதித் திட்டம் தீட்டியிருப்பதாக உளவுத்துறைக்குத் தகவல் கிடைத்தது. இதனடிப்படையில் பயங்கரவாத முகாம்கள் மீது எமது படையினர் தாக்குதல் நடத்தினர்.

**பெண் இராணுவ அதிகாரிகள் பேட்டி**

இந்திய இராணுவ கேர்னல் ஷோபியா குரேஷி, விங் கொமாண்டர் லியோமிகா சிங் ஆகியோர் அளித்த பேட்டியில், ‘‘25 நிமிடங்களில் பாகிஸ்தான் மீது சிந்தூர் ஒப்ரேஷன் நடத்தி முடிக்கப்பட்டது. 9 பயங்கரவாத முகாம்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. பொதுமக்கள் எவரும் பாதிக்காத வகையில் இந்தத் தாக்குதல் நடந்தது. ஆயுதங்கள் மிகக் கவனமாக கையாளப்பட்டன. பொதுமக்கள் யாருக்கும் பாதிப்பில்லை. பாகிஸ்தான் தரப்பில் ஏதும் தாக்குதல் வந்தால் அதனை எதிர்கொள்ள எமது படை தயாராக உள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

**சென்னையில் பாதுகாப்பு அதிகரிப்பு**

‘ஒபரேஷன் சிந்தூர்’ எதிரொலியாக சென்னை சென்ரல் ரயில் நிலையம் மற்றும் விமான நிலையங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப் பட்டுள்ளது. மேலும், திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் ரோந்து அதிகரிக்கப்பட் டுள்ளது. வீதியோரங்களில் வாகனங்கள் நிறுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

**9 விமான நிலையங்கள்; 10ஆம் திகதி வரை பூட்டு**

இந்நிலையில், போர் பதற்றத்தின் எதிரொலியாக ஜம்மு, ஸ்ரீநகர், லே, ஜோத்பூர், அமிர்தசரஸ், பூஞ்ச், ஜாம்நகர், சண்டிகர், ராஜ்கோட் ஆகிய 9 விமான நிலையங்கள் எதிர்வரும் 10ஆம் திகதி காலை 5.30 மணி வரை மூடப்படுவதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

**165 இண்டிகோ எயார்லைன்ஸ் உள்நாட்டு விமானங்கள் இரத்து**

இதேவேளை, நாடு முழுவதும் மே 10 வரை 165 இண்டிகோ எயார்லைன்ஸ் உள்நாட்டு விமானங்கள் இரத்துசெய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**மோடியின் வெளிநாட்டுப் பயணம் இரத்து**

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான அதிகரித்த பதற்றங்களைக் கருத்திற்கொண்டு, இந்த மாத இறுதியில் திட்டமிடப்பட்டிருந்த நோர்வே, குரோஷியா மற்றும் நெதர்லாந்து ஆகிய மூன்று நாடுகளின் பயணத்தை பிரதமர் நரேந்திர மோடி இரத்துச் செய்துள்ளதாக செய்தி நிறுவனமான ஏ.என்.ஐ. தெரிவித்துள்ளது.

**இருதரப்புத் தீர்வுக்கு அழைப்பு விடுத்த ரஷ்யா**

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான பதற்றங்கள் கவலையளித்து வருவதாகவும் நிதானம் மற்றும் அமைதியான இருதரப்பு தீர்வுக்கு அழைப்பு விடுப்பதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

**“நாங்கள் தாக்கப்பட்டால் பதிலடி கொடுப்போம் – பாகிஸ்தான்**

தாக்குதலை நிறுத்த இந்தியா முன்வந்தால் நாங்களும் தயாரென்று பாகிஸ்தான் அறிவித்துள்ளது. இதுதொடர்பாக அந்நாட்டுப் பாதுகாப்புத்துறை அமைச்சர் கவாஜா ஆசிப் தெரிவிக்கையில், ‘‘பாகிஸ்தான் எந்த விரோதப் போக்கையும் தொடங்காது, ஆனால், தாக்குதலை தொடர்ந்தால் பதிலடி கொடுப்போம். கடந்த இரண்டு வாரங்களாக இந்தியாவுக்கு எதிராக எந்த விரோத நடவடிக்கையையும் தொடங்க மாட்டோமென்று நாங்கள் தொடர்ந்து கூறி வருகிறோம். இருப்பினும், நாங்கள் தாக்கப்பட்டால், பதிலடி கொடுப்போம்’’ என்று தெரிவித்துள்ளார்.

**‘ஒபரேஷன் சிந்தூர்’**

காஷ்மீரின் பஹல்காமில் 26 சுற்றுலாப் பயணிகளை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்ற நிலையில், இந்தியா - பாகிஸ்தான் இடையே கடந்த சில நாட்களாக பதற்றமான சூழல் நிலவி வந்தது. இந்நிலையில், நேற்று (07) இந்தியா முழுவதும் 259 இடங்களில் போர் ஒத்திகை நடத்தப்போவதாக இந்தியா அறிவித்திருந்தது.

இந்நிலையில், எவரும் எதிர்பார்க்காத நேரத்தில் பாகிஸ்தான் மீது இந்தியா செவ்வாய்க்கிழமை நள்ளிரவில் (நேற்று 07) அதிரடித் தாக்குதல் நடத்தியுள்ளது. நள்ளிரவு 1.44 மணிக்கு பாகிஸ்தான் மீதும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலும் இந்தியா தாக்குதல் நடத்தியுள்ளது. மொத்தம் 9 இடங்களில் பயங்கரவாத முகாம்களைக் குறிவைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்படி பவல்பூர், முரிட்கே, சியால்கோட், சகாம்ரு, குல்பூர், பிம்பர், கோட்லி மற்றும் முசாபராபாத் ஆகிய பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளிலும் சியால்கோட், பஹவல்பூர், சக் அம்ரு மற்றும் முரிட்கே உள்ளிட்ட பாகிஸ்தான் நகரங்களிலும் உள்ள தீவிரவாத முகாம்களில் மட்டும் துல்லிய தாக்குதலை இந்தியா நடத்தியுள்ளது. இத் தாக்குதலுக்கு ‘ஒபரேஷன் சிந்தூர்’ என்று பெயரிடப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் முப்படைகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

**எந்தெந்த இடங்களில் தாக்குதல்?**

லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஸ்-இ-முஹமது, ஹிஸ்புல் முஜாஹிதீன் ஆகிய பயங்கரவாத அமைப்புகளின் முகாம்களைக் குறிவைத்து இந்திய இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

***மர்கஸ் அஹ்லே ஹதீஸ் – பர்னாலா (லஷ்கர்-இ-தொய்பா)***
***மர்கஸ் அப்பாஸ் – கோட்லி (ஜெய்ஸ்-இ-முகமது)***
***மஸ்கர் ரஹீல் ஷாஹித் – கோட்லி (ஹிஸ்புல் முஜாஹிதீன்)***
***ஷவாய் நல்லா முகாம் – முசாபராபாத் (லஷ்கர்-இ-தொய்பா)***
***சையத்னா பிலால் முகாம் – முசாபராபாத் (ஜெய்ஸ்-இ-முகமது)***
***மர்கஸ் சுப்ஹான் அல்லா – பஹவல்பூர் (ஜெய்ஸ்-இ-முஹமது)***
***மார்கஸ் தைபா – முரிட்கே (லஷ்கர்-இ-தொய்பா)***
***சர்ஜால் – தெஹ்ரா கலான் (ஜெய்ஸ்-இ-முஹமது)***
***மெஹ்மூனா ஜோயா – சியால்கோட் (ஹிஸ்புல் முஜாஹிதீன்)***

**நள்ளிரவில் ‘ஒபரேஷன் சிந்தூர்’ – திட்டமிட்டது எப்படி?.**

‘ஒபரேஷன் சிந்தூர்’ தாக்குதலை நடத்த தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் தலைமையில் சிறப்புக் குழு அமைக்கப்பட்டது.

★ துல்லியமாகத் தாக்கும் திறன்படைத்த அதிநவீன குண்டுகளைப் பயன்படுத்தி இலக்குகளைக் குறிவைத்து முப்படைகளும் இணைந்து அதிரடித் தாக்குதல்.

★ பஹல்காமில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நீதி கிடைக்கச் செய்யும் நோக்கில் ‘ஒபரேஷன் சிந்தூர்’.

★ இந்திய உளவு அமைப்புகள் ஒருங்கிணைந்து திட்டமிட்டுத் தாக்குதல் அரங்கேற்றம்.

★ தாக்குதல் நடத்தப்பட்ட இடங்களில் மீண்டும் தாக்குதல் தேவையா என கண்காணிப்பு.

★ தீவிரவாதிகளின் முகாம்களைக் குறிவைத்து மட்டுமே தாக்குதல் அரங்கேற்றம்

**நள்ளிரவு 1.22 மணி முதல் 2.46 மணி வரை நடந்தது என்ன?**

‘ஒபரேஷன் சிந்தூர்’ மற்றும் அதன் நீட்சியாக நிமிடத்துக்கு நிமிடம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் வெளியாகியுள்ளன.

அந்தவகையில் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 1.22 மணிக்கு ‘‘தாக்குதலுக்கு தயாராகிவிட்டோம், வெற்றிக்கு பயிற்சி எடுத்துவிட்டோம்’’ என்று இந்திய இராணுவத்தின் அதிகாரபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிடப்பட்டது.

***1.05 மணி முதல் 1.30 மணி வரை:*** பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்புப் பகுதியில் இந்தியா ஏவுகணைத் தாக்குதல். மொத்தம் 25 நிமிடம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.



***1,28 மணி முதல் 1.51 மணி வரை:*** பாகிஸ்தானின் பஹ்வல்புர், முசாபராபாத் மற்றும் பல பகுதிகளில் தாக்குதல்.

***1.51 மணி:*** ‘‘நீதி நிலைநாட்டப்பட்டுவிட்டது, ஜெய்ஹிந்த்’’ என்று இராணுவம் பதிவு வெளியிட்டது.

***2.46 மணி:*** பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், எக்ஸ் தளத்தில் ‘‘பாரத் மாதா கீ ஜெய்’’ என்று பதிவு.

இந்திய மத்திய அரசு மற்றும் இராணுவத்தின் அதிகாரபூர்வ அறிவிப்புக்குப் பின்னரே உலக நாடுகளுக்குப் பாகிஸ்தானுக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை பற்றிய விவரங்கள் தெரிய வந்துள்ளன.

**தாக்குதலுக்கு இந்தியா பயன்படுத்திய ஆயுதங்கள்**

‘ஒபரேசன் சிந்தூர்’ தாக்குதலுக்கு இந்திய இராணுவம் ரபேல் ஜெட் விமானங்கள், ஸ்கால்ப் ஏவுகணைகள், ஹேமர் குண்டுகளைப் பயன்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய கடற்படையின் ஆதரவுடன் இந்தத் தாக்குதலை இந்திய இராணுவம் வெற்றிகரமாக நடத்தியுள்ளது. குறிப்பாக, பாகிஸ்தான் பயங்கரவாத முகாம்களை கடல்வழி மற்றும் வான்வழியாக இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

**முகாம்களை அழிக்க பயன்படுத்தப்பட்ட ரபேல்**

பாகிஸ்தானிலுள்ள பயங்கரவாத முகாம்களை அழிக்க ரபேல் விமானங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ரபேல் விமானங்களில் SCALP மிசைல்கள் மற்றும் AASM Hammer பம்புகள் பொருத்தப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. உயர் துல்லியமான ஆயுதங்கள், பயங்கரவாத அமைப்புகளின் தலைமையகங்களை அது துல்லியமாக குறிவைத்து தாக்கின.

**SCALP ஏவுகணை** – 5.1 மீற்றர் நீளம், 1,300 கிலோ எடை, வெடிக்கும் பகுதியின் எடை 450 கிலோவாகும். 250 முதல் 560 கி.மீ. வரை சென்று SCALP ஏவுகணை துல்லியமாக தாக்கும் என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஏவுகணை வான்வழித் தாக்குதல் நடத்த பயன்படுத்தப்படும் முக்கியமான ஒன்றாகும்.

**ஹேமர் குண்டுகள்** - லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாத அமைப்பு மற்றும் ஜெய்ஷ்-இ-முஹமது அமைப்பின் தலைமையகம் உள்ளிட்ட இடங்களில் தாக்குதல் நடத்த பயன்படுத்தப்பட்டுள்ளன. ஹேமர் குண்டுகளை பிரான்ஸிலிருந்து இந்தியா வாங்கியுள்ளது. ஹேமர் குண்டு என்பது துல்லியமாக தாக்கும் திறன் கொண்டது. 50 முதல் 70 கிலோமீற்றர் வரை இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டது. முக்கிய இடங்கள் அடையாளம் காணப்பட்டு தாக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

**சிந்தூர் எனப் பெயரிட்டது ஏன்?**

பொதுவாக தாக்குதல் நடத்தப்பட்ட இடம் அல்லது அது தொடர்பான பெயர்களுடன் இந்த அதிடிரத் தாக்குதல் அடையாளப்படுத்தப்படும். ஆனால், இந்தத் தாக்குதலுக்கு பெண்கள் நெற்றியில் இடும் ‘சிந்தூர்’ என்ற திலகத்தின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதற்கு ஒரு குறிப்பிட்ட காரணம் இருக்கிறதாம். சிந்தூர் என்பது திருமணமான பெண்கள் நெற்றி வகிடில் இடும் குங்குமத்தைக் குறிக்கும் என்பதால், பஹல்காம் தாக்குதலில் தங்களது கண் முன்னே கணவர், பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதைப் பார்த்த இந்த பயங்கரவாதத் தாக்குதலில் கணவனை இழந்த பெண்களின் குங்குமத்துக்குப் பதில் சொல்லும் வகையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும் அதனால்தான் சிந்தூர் என்று பெயரிடப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், தாக்குதலுக்கு ‘ஒபரேஷன் சிந்தூர்’ என்ற பெயரை இந்தியப் பிரதமர் மோடியே தெரிவுசெய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. குங்குமச் சிவப்பான திலகம் என பொருள்படும் சிந்தூர் என்ற வார்த்தை, போருக்குச் செல்பவர்களுக்கு பெண்கள் வெற்றி திலகமிடுவதைக் குறிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**தாக்குதல் பின்னணி**

‘ஒபரேஷன் சிந்தூர்’ என்ற குறியீட்டுப் பெயரில் இரவுநேர துல்லியத் தாக்குதல்களில் மொத்தம் 9 தளங்கள் ரேடாரில் துல்லியமாகக் குறிவைக்கப்பட்டு தாக்கப்பட்டன.

பிரிசிசியன் ஸ்டிரைக் (Precision strike) என்று இதை அழைப்பார்கள். இது தீவிரவாத கேம்ப் மற்றும் இராணுவ கேம்ப் ஆகியவற்றை குறிக்கும். இப்படி குறிக்கப்பட்ட மையங்கள் அதன்பின் ட்ரோன் மூலம் கண்காணிக்கப்படும். அவை சரியான இடங்களா என்று உறுதிசெய்யப்படும். உளவு பணிகள் முடிந்த பின்னர் தாக்குதல் திட்டங்கள் வரையறுக்கப்படும். எங்கே இருந்து தாக்குதல் நடத்துவது என்று உறுதிசெய்யப்படும்.

விமானத் தாக்குதல் என்றால் எவ்வாறு உள்ளே செல்வது, தரைவழித் தாக்குதல் என்றால் எவ்வாறு நடத்துவது என்று திட்டம் வகுக்கப்பட்டு திட்டம் உருவாக்கப்படும். இந்த தடவை இந்தியாவிலிருந்தே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்தியாவிலிருந்தே ஏவுகணைகள் மூலம் 9 இடங்கள் தாக்கப்பட்டுள்ளன.

இதற்கான திட்டங்களை உறுதிசெய்த பின்னர் கடைசியாக பிரதமர் அனுமதி யளித்த பின்னர் தாக்குதல் நடத்த முடிவு எடுக்கப்பட்டது. தாக்குதல் தினமான நேற்று (07) 3-4 மணி நேரங்களுக்கு முன்னரே வீரர்களுக்கே சொல்லப்பட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், தாக்குதல்கள் கசிவதைத் தடுக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத்தொடர்ந்து நீண்ட தூரம் பயணிக்கும் ஏவுகணைகளைக்கொண்டு இந்திய இராணுவம் தாக்குதலை நடத்தியுள்ளது.

**அமெரிக்கத் தூதரகம் எச்சரிக்கை**

பாகிஸ்தான் மீதான இந்தியாவின் தாக்குதலால் இந்திய - பாகிஸ்தான் எல்லையில் பதற்றம் நிலவி வருகிறது. எனவே, இந்தியாவின் ‘ஒபரேஷன் சிந்தூர்’ நடந்த பகுதிகளைச் சுற்றியிருக்கும் அமெரிக்கர்கள் அவ்விடத்தைவிட்டுச் செல்ல வேண்டுமென்று அமெரிக்கத் தூதரகம் அந்நாட்டு மக்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளது.

அதேபோல, இந்திய - பாகிஸ்தான் எல்லை மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகிலுள்ள பகுதிகளுக்கு அமெரிக்கர்கள் பயணம் செய்யவேண்டாம் என்றும் பாகிஸ்தான் பயணத்தை மறுபரிசீலனை செய்யுங்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பாலாகோட் தாக்குதலுக்கு நேர் எதிரான சிந்தூர் தாக்குதல்!**

ஏற்கனவே 2016 அதிரடித் தாக்குதல், 2019 பாலாகோட் விமானப்படைத் தாக்குதல்கள் ஒன்றுபோல நடத்தப்பட்டிருந்தாலும் இதிலிருந்து ‘சிந்தூர்’ மாறுபட்டது என்கிறார்கள்.

பாலாகோட் தாக்குதலின்போது ஒரேயொரு பயங்கரவாத முகாம்தான் இலக்கு. சிந்தூர் தாக்குதலில் 9 பயங்கரவாத முகாம்கள். பாகிஸ்தான் எல்லையை ஒட்டிய முகாம் - பாகிஸ்தான் உள் பகுதிகளிலும் மற்றும் பாகிஸ்தான் ஆக்ரமிப்புக் காஷ்மீர் பகுதிகளிலும் தாக்குதல். சிந்தூர் தாக்குதலில் அதிநவீன துல்லியமன வெடிபொருட்களும் முகாம்களை கண்டறியும் ட்ரோன்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பாலாகோட் தாக்குதல் விமானப் படையால் மட்டும் நடத்தப்பட்டது. மிக அபாயகரமான இரண்டு பகுதிகளில் இந்திய இராணுவம் எல்லையைக் கடந்துசென்று, பாகிஸ்தானின் இதயம்போன்ற பகுதிகளில் சிந்தூர் தாக்குதலை நடத்தியிருக்கிறது. இது 2019 தாக்குதலைக் காட்டிலும் மிகப்பெரியது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo –07